*பிரஸார் பாரதி*
*அகில இந்திய வானொலி, சென்னை*
*25 10 2025 SATURDAY 6.30 PM*
*மாநிலச் செய்திகள்*

*தலைப்புச் செய்திகள்*

1. *தமிழகத்தில், பிரதமரின் விவசாயிகள் வருவாய் ஆதரவுத் திட்டத்திற்கான பயனாளிகள் பட்டியலை மாநில அரசு முழுமையாக தயாரித்து அனுப்பவில்லை என்று மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் குற்றம் சாட்டியுள்ளார்.*
2. *செல்போன்களுக்கு தேவையான அனைத்து பாகங்களையும் உள்நாட்டிலேயே தயாரிப்பதற்கான இலக்கு கடந்த இரண்டாண்டுகளில் எட்டப்பட்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.*
3. *மாநிலத்தில் கொள்முதல் செய்யப்படும் நெல்லின் ஈரப்பதத்தை மத்தியக்குழுவினர் இன்று செங்கல்பட்டு மாவட்டத்தில் ஆய்வு செய்தனர்.*
4. *சென்னை, செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூர் மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் அடுத்த 24 மணிநேரத்தில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.*
5. *ஆஸ்திரேலியாவுக்கு எதிரான மூன்றாவது மற்றும் இறுதி ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா 9 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.*

*இனி விரிவான செய்திகள் ----*

*<<<<<<>>>>>*

*தமிழகத்தில், பிரதமரின் விவசாயிகள் வருவாய் ஆதரவுத் திட்டத்திற்கான பயனாளிகள் பட்டியலை மாநில அரசு முழுமையாக தயாரித்து அனுப்பவில்லை என்று மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் குற்றம் சாட்டியுள்ளார்.*

*வேலூர் மாவட்டம் விரிஞ்சிபுரத்தில் இன்று நடைபெற்ற விவசாயிகள் கலந்துரையாடல் நிகழ்ச்சியில் பங்கேற்ற பேசிய அமைச்சர், இந்த திட்டத்திற்கு தகுதியான விவசாயிகளின் பட்டியலை விரைந்து தயாரித்து மத்திய அரசுக்கு அனுப்பிவைக்குமாறு தமிழக முதலமைச்சருக்கு தாம் கடிதம் எழுத உள்ளதாகவும் தெரிவித்தார்.*

*தென்னையில் பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்துவது குறித்து ஆய்வு செய்ய வேளாண் விஞ்ஞானிகள் குழுவை தமிழகத்திற்கு தாம் அனுப்பிவைக்க உள்ளதாகவும் அவர் கூறினார்.*

*மாம்பழத்திற்கு உரிய விலை கிடைக்க தமிழக அரசுடன் இணைந்து புதிய திட்டத்தை மத்திய அரசு கொண்டுவரும் என்று திரு சிவ்ராஜ் சிங் சௌகான் தெரிவித்தார்.*

*<<<<<<>>>>>*

*செல்போன்களுக்கு தேவையான அனைத்து பாகங்களையும் உள்நாட்டிலேயே தயாரிப்பதற்கான இலக்கு கடந்த இரண்டாண்டுகளில் எட்டப்பட்டுள்ளதாக மத்திய தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.*

*புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், சிசிடிவி உள்ளிட்ட செயலிகளை பயன்படுத்தும் வகையில் செல்போன்களுக்கான சிப்கள் உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்டுள்ளதாக கூறினார்.*

*மைக்ரோ பிராசசர்களை சக்தி வாய்ந்தவையாக உருவாக்குவதற்கு 200 கோடி ரூபாயை மத்திய அரசு முதலீடு செய்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.*

இதனால், கணினி செயலிகள் துரிதமாகவும், துல்லியமாகவும் செயல்படும் என்றும், சர்வர்களை எவ்வித தடையும் இன்றி எந்த நேரமும் அணுக முடியும் என்று அவர் கூறினார்.

ஆன்லைன் மூலமாக பதிவிடப்படும் வீடியோக்கள் மற்றும் போலியான தகவல்களை தடுக்கும் வகையில் Chat Bot தொழில்நுட்பம் மேம்படுத்தப்படும் என்றும் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

தமிழகத்தில் கொள்முதல் செய்யப்படும் நெல்லின் ஈரப்பதத்தை மத்தியக்குழுவினர் இன்று செங்கல்பட்டு மாவட்டத்தில் ஆய்வு செய்தனர்.

இம்மாவட்டத்தில் மழையால் பாதிக்கப்பட்ட விளைநிலங்களையும், நெற்பயிர்கள் பாதிப்படைந்தது குறித்தும் அவர்கள் நேரடியாக ஆய்வு செய்தனர்.

முதல்கட்டமாக, திருக்கழுக்குன்றம் ஒன்றியம் கீரப்பாக்கம் பஞ்சாயத்துக்கு உட்பட்ட நெல் கொள்முதல் நிலையத்தை ஆய்வு செய்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்படும் நெல்லின் ஈரப்பதத்தை 17 சதவீதத்திலிருந்து, 22 சதவீதமாக அதிகரிக்க வேண்டும் என்ற மாநில அரசின் கோரிக்கையையடுத்து, மத்தியக்குழுவினர் கொள்முதல் செய்யப்படும் நெல்லின் ஈரப்பதத்தை ஆய்வு செய்து வருகின்றனர்.

திருவள்ளூர், காஞ்சிபுரம், தஞ்சாவூர், மயிலாடுதுறை, திருச்சி, புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் மத்தியக்குழுவினர் இம்மாதம் 27-ஆம் தேதிவரை இந்த ஆய்வை மேற்கொள்ள உள்ளனர்.

<<<<<<>>>>>

தமிழகத்தில் மழையால் பாதிக்கப்பட்ட நெற்பயிருக்கு ஏற்பட்டுள்ள சேதத்திற்கு ஏற்றார்போல் நிவாரணம் வழங்க மாநில அரசு நடவடிக்கை எடுக்கும் என்று வேளாண் துறை அமைச்சர் திரு எம் ஆர் கே பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

காஞ்சிபுரத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், நெய்பயிர்கள் மழையில் நனைந்ததால் 33 சதவீதம் அளவுக்கு ஈரப்பதம் இருப்பது கண்டறியப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மாநிலத்தில் அரிசி உற்பத்தி மூன்று மடங்கு உயர்ந்துள்ளதாக அவர் கூறினார்.

மாநிலத்தில் கொள்முதல் செய்யப்பட்ட நெல் மணிகள், பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளதாகவும் திரு எம் ஆர் கே பன்னீர்செல்வம் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

தமிழகத்தில் நெல் கொள்முதல் செய்யும் பணியை மாநில அரசு முறையாக செயல்படுத்தவில்லை என்று பிஜேபி மாநிலத்தலைவர் திரு நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

தஞ்சாவூரில் இன்று நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை பார்வையிட்டபின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், செப்டம்பர் மாதத்தில் இருந்து நெல் கொள்முதல் பணிகளை துரிதமாக மேற்கொள்ள மாநில அரசு தவறிவிட்டதாக கூறினார்.

மத்திய அரசு கட்டித்தந்த கொள்முதல் நிலையங்கள் உட்பட அனைத்து அரசு கொள்முதல் நிலையங்களும் மூடப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

தனியார் மூலம் நடத்தப்படும் கொள்முதல் நிலையங்களில் விவசாயிகள் வாடகை செலுத்த வேண்டியிருப்பதாகவும் திரு நயினார் நாகேந்திரன் கூறினார்.

<<<<<<>>>>>

*பிரதமர் திரு. நரேந்திர மோடி மக்களிடையே மனம் திறந்து பேசும் மன்கிபாத் நிகழ்ச்சி அகில இந்திய வானொலியில் நாளை காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.*

*நாட்டில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்,*

*பிரதமர் உரை முடிந்தவுடன் அதன் தமிழாக்கத்தை சென்னை அகில இந்திய வானொலி ஒலிபரப்புகிறது.*

*இது இரவு 8 மணிக்கு மறுஒலிபரப்பு செய்யப்படும்.*

*தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள வானொலி நிலைங்கள் இதனை அஞ்சல் செய்யும்.*

*<<<<<<>>>>>*

*மகளிர் சுயஉதவிக்குழுக்கள் மூலம் பெண்களின் பொருளாதார நிலை உயர்ந்து வருவதாக மாநில நிதியமைச்சர் திரு தங்கம் தென்னரசு தெரிவித்துள்ளார்.*

*விருதுநகரில் இன்று மகளிர் சுயஉதவிக்குழுக்களுக்கு கடனுதவி வழங்கும் விழாவில் 181 மகளிர் சுயஉதவிக்குழுக்களை சேர்ந்த ஆயிரத்து 537 பயனாளிகளுக்கு 11 கோடியே 68 லட்சம் ரூபாய் மதிப்பிலான கடனுதவியை வழங்கி அவர் பேசினார்.*

*மாநிலம் முழுவதிலும் மகளிர் சுயஉதவிக்குழுக்கள் வேரூன்றி சிறப்பாக செயல்பட்டு வருவதாக அமைச்சர் தெரிவித்தார்.*

*<<<<<<>>>>>*

*தென்கிழக்கு வங்கக்கடலில் நிலைகொண்டுள்ள காற்றழுத்த தாழ்வு மண்டலம் மேற்கு திசையில் மணிக்கு 7 கிலோமீட்டர் வேகத்தில் நகர்ந்து வருகிறது.*

*சென்னைக்கு கிழக்கு-தென்கிழக்கே தொள்ளாயிரத்து 50 கிலோமீட்டர் தொலைவில் இது மையம் கொண்டுள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.*

*இந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் வரும் திங்கட்கிழமையன்று புயலாக வலுப்பெரும் என்று சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் தெரிவித்துள்ளார்.*

*சென்னை, செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூர் மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் அடுத்த 24 மணிநேரத்தில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாகவும் சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் கூறினார்.*

*<<<<<<>>>>>*

***மாவட்டச் செய்திகள்***

*சேலம் மாவட்டம் சூரமங்கலம் பகுதியில் கட்டப்பட்டுவரும் மாணவியர் விடுதியை மாநில அமைச்சர் திரு மதிவேந்தன் இன்று ஆய்வு செய்தார்.*

*--------------*

*திருவள்ளூர் மாவட்டத்தில் பனை விதைகள் நடும் நிகழ்ச்சியை ஆட்சியர் திரு பிரதாப் இன்று தொடங்கி வைத்தார்.*

*<<<<<<>>>>>*

***விளையாட்டுச் செய்திகள்***

*ஆஸ்திரேலியாவுக்கு எதிரான மூன்றாவது மற்றும் இறுதி ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா 9 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.*

*சிட்னியில் இன்று நடைபெற்ற இப்போட்டியில், முதலில் பேட் செய்த ஆஸ்திரேலியா 46 புள்ளி நான்கு ஓவரில் 236 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.*

*237 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய இந்தியா 38 புள்ளி மூன்று ஓவரில் ஒரு விக்கெட் இழப்பிற்கு வெற்றி இலக்கை எட்டியது.*

***----------------***

***லண்டன் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் மணிக்கா பத்ரா காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.***

*<<<<<<END>>>>>*